**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25 ம் நாள் புதன்கிழமை**

**I.A.No.04/2025 in O.S.No.245/2017**

1. சௌந்தரபாண்டியன் ... மனுதாரர்/வாதி

**//எதிராக//**

1. மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர்
2. வருவாய் கோட்டாட்சியர், குளித்தலை
3. வட்டாட்சியர், குளித்தலை
4. சங்கரி
5. தங்கரெத்தினம்
6. மனோகரன்
7. மீனா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

1. சூர்யா
2. நரேன் ... உத்தேச தரப்பினர்கள்

இம்மனு என் முன்பாக 23.02.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.மனோகரன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், 4, 5 மற்றும் 7 ம் எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 6 ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட்டும், இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

மனுவில் கண்ட உத்தேச தரப்பினர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்</u>**

1) மனுதாரர் இவ்வழக்கின் வாதி. இவ்வழக்கை விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். 4ம் பிரதிவாதி மனுதாரரின் சகோதரர் பன்னீர்செல்வத்தின் மகள் அல்ல என விளம்புகை செய்யக் கோரியும், வாரிசு சான்றிதழில் 4ம் பிரதிவாதியின் பெயரை நீக்கம் செய்யக்கோரியும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் சகோதரர் 5ம் பிரதிவாதியை 09.03.1979ல் திருமணம் செய்து கொண்டார். பின்னிட்டு 30.12.1979ல் வினோத்குமார் என்ற ஆண் குழந்தை பிறந்துள்ளது.

2) மனுதாரர் சகோதரர் பன்னீர்செல்வம் தனது தொழில் சம்பந்தமாக வெளி நாடுகள் சென்று வந்தார். 5ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதியுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு 4ம் பிரதிவாதியை பெற்று எடுத்துள்ளார். 4ம் பிரதிவாதி மனுதாரரின் சகோதரர் பன்னீர் செல்வத்தின் மகள் அல்ல. பன்னீர் செல்வத்திற்கும், 5ம் பிரதிவாதிக்கும் திருச்சி சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து ஆகி விட்டது. பன்னீர்செல்வம் தனது மகனை ஆளாக்கி 7ம் பிரதிவாதிக்கு திருமணம் செய்து வைத்துள்ளார். அவர்களுக்கு இம்மனுவின் உத்தேச தரப்பினர்களான சூர்யா, நரேன் ஆகியோர்கள் வாரிசுகள்.

3) பன்னீர்செல்வம் தனது சொத்துக்கள் குறித்து தனது மகனின் மக்களான சூர்யா, நரேன் ஆகியோர்களுக்கு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார். பன்னீர்செல்வம் 20.04.2015ம் தேதி இறந்துவிட்டார். அவரது ஒரே மகனான வினோத்குமார் 02.01.2016ல் இறந்து விட்டார். இந்நிலையில் 4ம் பிரதிவாதி தன்னை பன்னீர்செல்வத்தின் மகள் என வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளார்.

4) 7ம் பிரதிவாதி தனது பதிலுரையில் பன்னீர்செல்வத்தின் அனைத்து சொத்துக்களுக்கும் சூர்யா, நரேன் ஆகியோர்கள் அனுபவம் செய்து வருவதாகவும் எனவே அவர்கள் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் என கூறியிருந்தார். எனவே மேற்படி நபர்களை இவ்வழக்கில் சேர்க்க வேண்டியது அவசியமாகிறது. இம்மனுவின் உத்தேச தரப்பினர்களை வழக்கில் சேர்க்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

5) மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். வழக்கு விசாரணைக்காக போடப்பட்டுள்ள நிலையில் இவ்வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உண்மையில் உத்தேச தரப்பினர் அவசிய தரப்பினராக இருந்தால் அவர்களை இவ்வழக்கு தாக்கல் செய்த போதே சேர்த்திருக்க வேண்டும். ஆனால் தற்போது 7ம் பிரதிவாதி பதிலுரை தாக்கல் செய்த சமயத்தில் இந்த மனு தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

6) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

7) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் இறந்து போன பன்னீர் செல்வத்தின் சொத்துக்களை தற்போது சுவாதீனம் செய்யும் உத்தேச தரப்பினர்களை இவ்வழக்கில் சேர்க்க வேண்டுமென வாதிடப்பட்டது. மேற்படி மனுவிற்கு 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித பதிலுரையும் தாக்கல் செய்யவில்லை. 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மேம்போக்கான ஆட்சேபணை மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

8) இவ்வழக்கானது இறந்துபோன பன்னீர்செல்வத்தின் மகள் 4ம் பிரதிவாதி அல்ல என விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் பன்னீர்செல்வம் மற்றும் அவரது மகன் வினோத்குமார் இருவரும் உயிருடன் இல்லாத நிலையில் பன்னீர்செல்வத்தின் பேரன்களான உத்தேச தரப்பினர்கள் இவ்வழக்கில் இருக்க வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**********************************

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**
**I.A.No. 04/2025**
**in**
**O.S.No. 245/2017**
**DRAFT / FAIR ORDER**
**D.D.25.02.2026**

**********************************